437

உ

கணபதி துணை.

சித்தோடு சித்திவிநாயகர்

மகா கும்பாபிஷேக மண்டலாபிஷேக

நினைவு மலர்

தொகுத்தவர்:

திருமுருக கிருபானந்தவாரி அவர்கள்

சிவநேயச் செல்வர்கட்கு இலவசமாக

வெளியிட்டவர்:

ஈரோடு. தருமகுணசீலர்

உயர்தி... மாரியப்ப முதலியார் அவர்கள்

...உ எட்டாம் நாள்.

...950

924:38.2118CH
N50.
172500

உ

கணபதி துணை.

சித்தோடு சித்திவிநாயகர்

மகா கும்பாபிஷேக மண்டலாபிஷேக

நினைவு மலர்

OFFICE OF ...
22 AUG 1950
MADRAS

தொகுத்தவர்:

திருமுருக கிருபானந்தவாரி அவர்கள்

சிவநேயச் செல்வர்கட்கு இலவசமாக
வெளியிட்டவர்:

ஈரோடு தருமகுணசீலர்

உயர்திரு *மா. சு. மாரியப்ப முதலியார்* அவர்கள்.

விக்ருதி ஆடி எட்டாம் நாள்.

1950

உ

முருகா

ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் துதி

விருப்புட னுபய சரணமேன் மலரை
வேண்டுவார் வேண்டிய தளிக்கும்
பொருப்புகள் தோறு நின்றரு ளொருவன்
புகழினை யகநேகப் புகன்று
கருப்புகு தாத கதிதனைக் காட்டும்
கலையுணர் புலவர்கள் திலகந்
திருப்புக ழருண கிரியெம தடிகள்
திருவடி குருவடி வாமே.

உ

ஓம் கணேசாய நம

முன்னுரை

கொங்கு மண்டலத்தில் சிறப்பு வாய்ந்த ஈரோடுக்கு அருகில் சித்தோடு என்ற கிராமத்தில் அடியார்கள் பொருட்டு எழுந்தருளியுள்ள சித்திவிநாயகப் பெருமானுடைய திருக்கோயிலை பழுது பார்த்து செங்குந்த மரபினர்கள் அன்புடன் விக்ருதி–வைகாசி-23ம் நாள் திங்கட்கிழமை, பழநி சித்தாந்த சரபம் காசிவாசி சிவஸ்ரீ ஈசான சிவாசாரிய சுவாமிகள் அவர்களைக் கொண்டு மகா கும்பாபிஷேகம் நடாத்திவைத்தார்கள்.

சித்தி விநாயகர் திருக்கோயிலுக்கு மணி மண்டபம் மிக்க வனப்பாக, மாரியண்ண முதலியார் குமாரர் சுப்பராய முதலியார் நினைவுக் குறியாக, அவருடைய தவப் புதல்வர் உயர் திரு மா. சு. மாரியப்ப முதலியார் அவர்கள் தமது உபய மார்கப் புதுக்கிவைத்தார்கள்.

அன்றியும் விநாயகர் திருக்கோயிலுக்கு முன் நாச்சாயம்மாள் இலவச வாசக சாலையையும், தனலக்ஷ்மி நிலையமும் அன்பர்கட்கு அறிவை வளர்ப்பதற்கு அனுகூலமாக அன்பர் திரு மா. சு. மாரியப்ப முதலியார் மிகவும் அழகாகப் புதுக்கி வைத்தார்கள்.

உயர்திரு மா. சு. மாரியப்ப முதலியார் அவர்கள் சிறந்த பக்தியும் தரும குணமும் பூண்டவர்கள். பழநிக்குத் திங்கள் தோறும் சென்று வழிபடும் விரதங் கொண்டவர்கள்.

வடலூர் திருப்பணிக்கும், ஈரோடு சிவாலயத்திற்கும் பொருளுதவி புரிந்து உயர்ந்த பதி புண்ணியத்தையடைந்தவர்கள்.

சித்தி-விநாயகர் கும்பாபிஷேகத்தின் போது, உலகிற்குப் பொது மறையாகிய திருக்குறள் மாநாடு கூட்டி, ஈரோடு கோபி, கோவை, பழநி முதலிய பற்பல இடங்களிலிருந்து புலவர்மணிகளைத் தருவித்து அறிவுக்கு விருந்தாக இனிய அற நெறி விரிவுரைகளை நிகழ்த்துவித்து அரிய திருத்தொண்டு புரிந்தார்கள்.

கும்பாபிஷேகம் நிகழ்ந்த மறு நாள் தொடங்கி, எல்லோரும் செவிக்கு உணவாகக் கேட்டு அருள் நலம் பெறும் பொருட்டு,

செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம் அச் செல்வம்
செல்வத்துள் எல்லாந் தலை.

என்ற பொய்யாமொழிப்படி, எந்த புராணங்கட்கும் தாயகமாகிய கந்த மகாபுராணத்தை நாடோறும் தக்க புலவர்களைக் கொண்டு விரிவுரை நிகழ்த்தி முடிவு செய்தார்கள். மண்ட

லாபிஷேக தினமாகிய விக்ருதி–ஆடி–8ம் நாள் ஞாயிற்றுக் கிழமை இன்று வள்ளியம்மையார் திருமணம் நிகழ்கின்றது.

அதன் நினைவுமலராக இதனை அன்பர் மாரியப்ப முதலியார் அவர்கள் வெளியிட்டு பக்தகோடிகளுக்குப் பரிசாக வழங்குகின்றார்கள். இந்நூல் ஒவ்வொருவரும் நாள்தோறும் பூஜையில் பாராயணஞ் செய்யத் தகுந்தது. இதனை அன்புடன் ஓதுவார்கள், இகபர நலன்களை எளிதிற் பெறுவார்கள்.

நற்குணம் பூண்ட நண்பர் திரு மாரியப்ப முதலியாருடைய அறச்செயல்கள் பாராட்டுதற்கு உரியன. இன்னும் பலப்பல சிவபுண்ணியங்களைச் செய்யும்படி எங்கும் நிறைந்த இளம்பூரணன் இன்னருள் புரிவானாக.

திரு மா. சு. மாரியப்ப முதலியார் அவர்கட்கு. நீண்ட ஆயுள், நிறைந்த செல்வம், நன்மக்கட்பேறு, அறப்பண்பு, அடியாரிணக்கம், உறுதியான உள்ளன்பு முதலிய எல்லா நலன்களையும் பன்னிருகரங்களையுடைய பரமநாயகன் வழங்குவாராக.

அன்பன்

கிருபானந்தவாரி

உ

முருகா

ஔவையார் அருளிச்செய்த

விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வண்ண மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரு மூஷிக வாகன

இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டி என்செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்குங் கருத்தினை அறிவித்
திருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்

கடையிற் சுழிமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவிலுணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய சபையில்
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற் சக்கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்மமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரிஎட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கு மனமு மில்லா மனோலயந்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்
திருள்வெளி யிரண்டுக் கொன்றிட மென்ன

அருள் தரும் ஆனந்தத் தழுத்தியென் செவியில்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவிற் கணுவா யப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமு நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தி னரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

விநாயகர் அகவல் முற்றிற்று.

உ

சிவமயம்

ஓம் குமாரகுருப்யோ நம:

திருச்சிற்றம்பலம்

சண்முக கவசம்

அறுசீர்க் கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

அண்டமா யவனி யாகி யறியொணாப் பொருள தாகித்
தொண்டர்கள் குருவு மாகித் துகளறு தெய்வ மாகி
எண்டிசை போற்ற நின்ற வென்னருள் ஈச னான
திண்டிறற் சரவ ணத்தான் றினமுமென் சிரசைக் காக்க.

ஆதியாங் கயிலைச் செல்வ னணிநெற்றி தன்னைக் காக்க
தாதவிழ் கடப்பந் தாரான் றானிரு நுதலைக் காக்க
சோதியாந் தணிகை யீசன் றுரிசிலா விழியைக் காக்க
நாதனுங் கார்த்தி கேய னாசியை நயந்து காக்க. 2

இருசெவி களையுஞ் செவ்வே ளியல்புடன் காக்க வாயை
முருகவேள் காக்க நாப்பன் முழுதுநற் குமரன் காக்க
துரிசறு கதுப்பை யானைத் துண்டனார் துணைவன் காக்க
திருவுடன் பிடரி தன்னைச் சிவசுப்ர மணியன் காக்க. 3

ஈசனும் வாகு லேய னெனதுகந் தரத்தைக் காக்க
தேசுறு தோள்வி லாவுந் திருமகண் மருகன் காக்க
ஆசிலா மார்பை யீரா ருயுதன் காக்க வென்றன்
ஏசிலா முழங்கை தன்னை யெழிற்குறிஞ் சிக்கோன் காக்க.

உறுதியாய் முன்கை தன்னை யுமையிள மதலை காக்க
தறுகணே றிடவே யென்கைத் தலத்தைமா முருகன் காக்க
புறங்கையை யயிலோன் காக்க பொறிக்கர விரல்கள் பத்தும்
பிறங்குமான் மருகன் காக்க பின்முது கைச்சேய் காக்க.

ஊணிறை வயிற்றை மஞ்ஞை யூர்தியோன் காக்க வம்புத்
தோணிமிர் சுரேச னுந்திச் சுழியினைக் காக்க குய்ய
நாணினை யங்கி கௌரி நந்தனன் காக்க பீஜ
ஆணியைக் கந்தன் காக்க வறுமுகன் குதத்தைக் காக்க. 6

எஞ்சிடா திடுப்பை வேலுக் கிறைவனார் காக்க காக்க
அஞ்சக னமொரி ரண்டு மரன்மகன் காக்க காக்க
விஞ்சிடு பொருட்காங் கேயன் விளரடித் தொடையைக் காக்க
செஞ்சர ணேச வாசான் றிமிருமுன் றொடையைக் காக்க

ஏரகத் தேவ னென்று னிருமுழங் காலுங் காக்க
சீறுடைக் கணைக்கா றன்னைச் சீரலை வாய்த்தே காக்க
நேருடைப் பரடி ரண்டு நிகழ்பரங் கிரியன் காக்க
சீரிய குதிக்கா றன்னைத் திருச்சோலை மலையன் காக்க. 8

ஐயுறு மலையன் பாதத் தமர்பத்து விரலுங் காக்க
பையுறு பழநி நாத பரனகங் காலைக் காக்க
மெய்யுடன் முழுது மாதி விமலசண் முகவன் காக்க
தெய்வநா யகவி சாகன் தினமுமென் நெஞ்சைக் காக்க. 9

ஒலியெழ வுரத்த சத்தத் தொடுவரு பூதப்ரேதம்
பலிகொளி ராக்க தப்பேய் பலகணத் தெவையா னாலுங்
கிலிகொள வெனைவேல் காக்க கெடுபரர் செய்யுஞ் சூன்யம்
வலியுள மந்த்ர தந்த்ரம் வருந்திடா தயில்வேல் காக்க. 10

ஓங்கிய சீற்ற மேகொண் டுவணிவில் வேல்சூ லங்கள்
தாங்கிய தண்ட மெஃகந் தடிபர சிட்டி யாதி
பாங்குடை யாயு தங்கள் பகைவரென் மேலே யோச்சின்
தீங்குசெய் யாம லென்னைத் திருக்கைவேல் காக்க காக்க.

ஔவிய முளரூ னுண்போ ரசடர்பே யரக்கர் புல்லர்
தெவ்வர்க ளெவரா னாலுந் திடமுட னெனைமற் கட்டத்
தவ்வியே வருவா ராயிற் சராசர மெலாம்பு ரக்குங்
கவ்வுடைச் சூர சண்டன் கையயில் காக்க காக்க. 12

கடுவிடப் பாந்தள் சிங்கங் கரடிநாய் புலிமா யானை
கொடியகோ ணாய்கு ரங்கு கோலமார்ச் சாலஞ் சம்பு
நடையுடை யெதனா லேனு நானிடர்ப் பட்டி டாமற்
சடுதியில் வடிவேல் காக்க சானவி முளைவேல் காக்க. 13

ஙகரமே போற்ற ழீஇ ஞானவேல் காக்க வன்புள்
சிகரிதே ணண்டுக் காலி செய்யனே ருலப் பல்லி
நகமுடை யோந்தி பூரா னளிவண்டு புலியின் பூச்சி
உகமிசை யிவையா லெற்கோ ரூறிலா தைவேல் காக்க. 14

சலத்திலுய் வன்மீ னேறு தண்டுடைத் திருக்கைமற்றும்
நிலத்திலுஞ் சலத்தி லுந்தா னெடுந்துயர் தரற்கே யுள்ள
குலத்தினா னன்வ ருத்தங் கொண்டிடா தவ்வவ் வேளை
பலத்துட னிருந்து காக்க பாவகி கூர்வேல் காக்க. 15

ஞமலியம் பரியன் கைவே னவக்கிர கக்கோள் காக்க
சுமவிழி நோய்க டந்த சூலையாக் ராண ரோகம்
திமிர்கழல் வாதஞ் சோகை சிரமடி கர்ண ரோகம்
எமையணு காம லேபன் னிருபுயன் சயவேல் காக்க. 16

டமருகத் தடிபோ னைக்குந் தலையிடி கண்ட மாலை
குமுறுவிப் புருதி குன்மங் குடல்வலி யீழை காசம்
நிமிரொணா திருத்தும் வெட்டை நீர்ப்பிர மேக மெல்லாம்
எமையடை யாம லேகுன் றெறிந்தவன் கைவேல் காக்க.

இணக்கமில் லாத பித்த வெரிவுமா சுரங்கள் கைகால்
முணக்கவே குறைக்குங் குஷ்ட மூலவெண் முளை தீ மந்தம்
சணத்திலே கொல்லுஞ் சன்னி சாலமென் றறையு மிந்தப்
பிணிக்குல மென்னையா ளாமற் பெருஞ்சத்தி வடிவேல் காக்க

தவனமா ரோகம் வாதஞ் சயித்திய மரோச கம்மெய்
சுவறவே செய்யு மூலச் சூடிளைப் புடற்று விக்கல்
அவதிசெய் பேதி சீழ்நோ யண்டவா தங்கள் சூலை
எவையுமென் னிடத்தெய் தாம லெம்பிரான் றிணிவேல்
காக்க. 19

நமைப்புறு கிரந்தி வீக்க நணுகிடு பாண்டு சோபம்
அமர்த்திடு கருமை வெண்மை யாகுபஃ றொழுநோய்
கக்கல்
இமைக்குமுன் னுறுவ லிப்போ டெழுபுடைப் பகந்த ராதி
இமைப்பொழு தேனு மென்னை யெய்தாம லருள்வேல்
காக்க. 20

பல்லது கடித்து மீசை படபடென் றேது டிக்கக்
கல்லினும் வலிய நெஞ்சங் காட்டியே யுருட்டி நோக்கி
எல்லினுங் கரிய மேனி யெமபடர் வரினு மென்னை
ஒல்லையிற் றார காரி ஓம்ஐம் ரீம்வேல் காக்க. 21

172500

மண்ணிலு மரத்தின் மீது மலையிலு நெருப்பின் மீதும்
தண்ணிறை ஜலத்தின் மீதுஞ் சாரிசெய் யூர்தி மீதும்
விண்ணிலும் பிலத்தி னுள்ளும் வேறெந்த விடத்து மென்னை
நண்ணிவந் தருளார் சஷ்டி நாதன்வேல் காக்க காக்க. 22

யகரமே போற்சூ லேந்து நறும்புயன் வேன்முன் காக்க
அகரமே முதலா மீரா றம்பகன் வேல்பின் காக்க
சகரமோ டாறு மானோன் றன்கைவே னடுவிற் காக்க
சிகரமின் றேவ மோலி திகழைவேல் கீழ்மேல் காக்க. 23

ரஞ்சித மொழிதே வானை நாயகன் வள்ளி பங்கன்
செஞ்சய வேல்கி ழக்கிற் றிறமுடன் காக்க வங்கி
விஞ்சிடு திசையின் ஞான வீரன்வேல் காக்க தெற்கில்
எஞ்சிடாக் கதிர்கா மத்தோ னிகலுடைக் கரவேல் காக்க.

லகரமே போற்கா ளிங்க னல்லுட னெளிய நின்று
தகரமர்த் தனமே செய்த சங்கரி மருகன் கைவேல்
நிகமுளை நிருதி திக்கி னிலைபெறக் காக்க மேற்கில்
இகலயில் காக்க வாயு வினிற்குகன் கதிர்வேல் காக்க. 25

வடதிசை தன்னி லீசன் மகனருட் டிருவேல் காக்க
விடையுடை யீசன் றிக்கில் வேதபோ தகன்வேல் காக்க
நடக்கையி லிருக்கு ஞான்று நவில்கையி னிமிர்கையிற்கீழ்க்
கிடக்கையிற் றூங்கு ஞான்று கிரிதுளைத் துளவேல்காக்க

இழந்துபோ காத வாழ்வை யீயுமுத் தையனார் கைவேல்
வழங்குநல் லூணுண் போது மால்விளை யாட்டின்
போதும்
பழஞ்சுரர் போற்றும் பாதம் பணிந்துநெஞ் சடக்கும்
போதும்
செழுங்குணத் தோடே காக்க திடமுடன் மயிலும் காக்க.

இளமையில் வாலி பத்தி லேறிடு வயோதி கத்தில்
வளரறு முகச்சி வன்றான் வந்தெனைக் காக்க காக்க
ஒளியெழு காலை முன்னெ லோஞ்சிவ சாமி காக்க
தெளிநடு பிற்ப கற்கால் சிவகுரு நாதன் காக்க. 28

இறகுடைக் கோழித் தோகைக் கிறைமுனி ராவிற் காக்க
திறலுடைச் சூர்ப்ப கைத்தே திகழ்பினி ராவிற் காக்க
நறவுசேர் தாட்சி லம்ப னடுநிசி தன்னிற் காக்க
மறைதொழு குழக னெங்கோன் மாறாது காக்க காக்க. 29

இனமெனத் தொண்ட ரோடு மிணக்கிடுஞ் செட்டு காக்க
தனிமையிற் கூட்டந் தன்னிற் சரவண பவனார் காக்க
நனியனு பூதி சொன்ன நாதர்கோன் காக்க வித்தைக்
கனியொடு சொன்ன தாசன் கடவுடான் காக்க வந்தே. 30

சண்முக கவசம் முற்றிற்று.

———:———

திருப்புகழமிர்தம் அச்சகம், சென்னை-2.

திருப்புகழமிர்தம் அச்சகம், சென்னை-2.